# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

## மதிப்பீட்டு அறிக்கை

# 16 - இஸ்லாம்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

# மதிப்பீட்டு அறிக்கை

# 16- இஸ்லாம்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**இஸ்லாம்**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# அறிமுகம்

இலங்கையில் நடைபெறும் பரீட்சைகளில் அதிக அளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்கே தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடைபெறும் இப்பரீட்சைப் பெறுபேறுகளினால் பெறப்படும் சான்றிதழ் உயர்கல்விக்கான தகுதியைப் பெறுவதற்கு மட்டுமன்றி நடுத்தர மட்டத்தில் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்கலைக்கழகங்களின் சில கற்கைநெறிகளைப் பயிலுவதற்கான அடிப்படைத் தகைமையை அளவிடும் அளவுகோலாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நம்பகம், தகுதி ஆகியவற்றுடன் உயர்தரமும் காரணங்களாகும்.

இப்பரீட்சையில் உயர் அடைவினைப் பெறுவதற்காக மாணவர்களும், அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோர்களும் அதிக முயற்சியை மேற்கொள்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும் அதற்கு உதவும் முகமாகவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இந்த மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்கான கல்விப்பணிப்பாளர்கள் அனைவருக்கும் பயனுள்ளதென்பதில் ஐயமில்லை. ஆகவே இதனை நூலகத்தில் பேணுதல் மிகப் பொருத்தமானதாகும்.

இந்த மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I இல், வினாப்பத்திரம் ரீதியாக பாட இலக்குகள், பாட அடைவு பற்றிய தகவல்கள், மாவட்டம், கல்வி வலயம் என்பவற்றிற்கேற்பத் தரப்பட்டுள்ளன. பகுதி II இல், முதலாம் இரண்டாம் வினாப்பத்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் விடைகள் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் வழிகாட்டல்களும் அடங்கியுள்ளன. பகுதி III இல் விடை எழுதும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களும் கற்றல் - கற்பித்தல் பணி பற்றிய கருத்துக்களும் ஆலோசனைகளும் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகளும் அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கு கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்க வேண்டிய முறைகள் பற்றியும் உங்களுக்கு துணைபுரியக் கூடிய அம்சங்களும் தரப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் பண்புத்தர விருத்திக்காகப் பயனுள்ள கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எங்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன் இதனைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட பிரதான பரீட்சகர்களுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்களுக்கும் இச்செயற்குழுவினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டப்ளியு.எம்.என்.ஜே. புஸ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2012 ஜனவரி 20

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | திரு. டப்ளியு.எம்.என்.ஜே. புஸ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | திருமதி. கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பும் தொகுப்பும் | - | திருமதி. மை.ஜீவராணிபுனிதா<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| ஆக்கக் குழு | - | திரு. எம். ரீ. இக்பால்<br>ஆசிரியர் ஆலோசகர்<br>வலயக் கல்வி அலுவலகம், கொழும்பு<br><br>திருமதி. அஸீமா ஹுசைன்<br>ஆசிரியர்<br>ஹைரியா முஸ்லிம் மகளிர் ம. வி.<br>கொழும்பு<br><br>திருமதி எம். எச். எஸ் ஸிர்ரியா<br>ஆசிரியர்<br>கம்பளை ஸாஹிரா கல்லூரி<br>கம்பளை |
| கணனி பக்க வடிவமைப்பு | - | திரு. பொ.அற்புதரூபன்<br>முகாமைத்துவ உதவியாளர்<br><br>செல்வி. றஹீனா ஹாசிம்<br>கணனி தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்


**பகுதி** I **பக்க எண்**

1.0 **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1. இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2. பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 2

1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 3

1.2.4 கல்வி வலயங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

**1.3.** **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு 10

**பகுதி** II

2.0 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.1 **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளித்தமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 11

2.1.2 வினாப்பத்திரம் I 12

2.1.3. வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம் 15

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் 16

2.2 **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 17

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும் 18

**பகுதி** III

3.0 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 30

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 31

## பகுதி I

# 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்

## 1.1 பாடக் குறிக்கோள்கள்

இஸ்லாத்தினை முறையாகக் கற்பதன் மூலம் அதன் போதனைகளை முறையாக விளங்கி தன் வாழ்வை இறை திருப்தியுள்ளதாக அமைப்பதோடு அதன் ஒழுக்கப் பண்பாடுகள் மூலம் சமூகத்தோடு இணைந்து ஏனைய சமயங்களையும் மதித்து ஒழுகக் கூடியதும், சிறந்த ஒழுக்கமுள்ளதும் நீதியுமான சமூகமாக வாழ்வதுமாகும்.

.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 பரீட்சைக்குத் தோற்றியோர் தொகை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 3402 | 82 | 3484 |
| தமிழ் | 21618 | 4854 | 26472 |
| ஆங்கிலம் | 37 | 1356 | 1393 |
| மொத்தம் | **25057** | **6292** | **31349** |

அட்டவணை 1

### 1.2.2 தரங்கள் பெறப்பட்ட விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்தி | | தனிப்பட்ட பரீட்சார்த்தி | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 8877 | 35.43 | 1556 | 24.73 | 10433 | 33.28 |
| B | 4496 | 17.94 | 1130 | 17.96 | 5626 | 17.94 |
| C | 5494 | 21.93 | 1610 | 25.59 | 7104 | 22.66 |
| S | 4099 | 16.36 | 1364 | 21.68 | 5463 | 17.43 |
| W | 2091 | 8.34 | 632 | 10.04 | 2723 | 8.69 |
| மொத்தம் | **25057** | **100.00** | **6292** | **100.00** | **31349** | **100.00** |

அட்டவணை 2

### 1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை:

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 2362 | 738 | 31.24 | 377 | 15.96 | 525 | 22.23 | 414 | 17.53 | 2054 | 86.96 | 308 | 13.04 |
| 2. கம்பஹா | 1176 | 488 | 41.50 | 194 | 16.50 | 232 | 19.73 | 182 | 15.48 | 1096 | 93.20 | 80 | 6.80 |
| 3. களுத்துறை | 1312 | 521 | 39.71 | 206 | 15.70 | 224 | 17.07 | 222 | 16.92 | 1173 | 89.41 | 139 | 10.59 |
| 4. கண்டி | 2987 | 1095 | 36.66 | 503 | 16.84 | 595 | 19.92 | 470 | 15.73 | 2663 | 89.15 | 324 | 10.85 |
| 5. மாத்தளை | 654 | 263 | 40.21 | 107 | 16.36 | 139 | 21.25 | 88 | 13.46 | 597 | 91.28 | 57 | 8.72 |
| 6. நுவரெலியா | 275 | 96 | 34.91 | 48 | 17.45 | 59 | 21.45 | 44 | 16.00 | 247 | 89.82 | 28 | 10.18 |
| 7. காலி | 531 | 196 | 36.91 | 78 | 14.69 | 108 | 20.34 | 81 | 15.25 | 463 | 87.19 | 68 | 12.81 |
| 8. மாத்தறை | 364 | 175 | 48.08 | 48 | 13.19 | 56 | 15.38 | 50 | 13.74 | 329 | 90.38 | 35 | 9.62 |
| 9. அம்பாந்தோட்டை | 138 | 52 | 37.68 | 30 | 21.74 | 23 | 16.67 | 14 | 10.14 | 119 | 86.23 | 19 | 13.77 |
| 10. யாழ்ப்பாணம் | 16 | 1 | 6.25 | 4 | 25.00 | 2 | 12.50 | 4 | 25.00 | 11 | 68.75 | 5 | 31.25 |
| 11. கிளிநொச்சி | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 |
| 12. மன்னார் | 134 | 40 | 29.85 | 19 | 14.18 | 25 | 18.66 | 35 | 26.12 | 119 | 88.81 | 15 | 11.19 |
| 13. வவுனியா | 156 | 36 | 23.08 | 26 | 16.67 | 36 | 23.08 | 47 | 30.13 | 145 | 92.95 | 11 | 7.05 |
| 14. முல்லைத்தீவு | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 15. மட்டக்களப்பு | 1381 | 674 | 48.81 | 281 | 20.35 | 271 | 19.62 | 118 | 8.54 | 1344 | 97.32 | 37 | 2.68 |
| 16. அம்பாறை | 3251 | 1369 | 42.11 | 587 | 18.06 | 712 | 21.90 | 451 | 13.87 | 3119 | 95.94 | 132 | 4.06 |
| 17. திருகோணமலை | 2132 | 618 | 28.99 | 378 | 17.73 | 515 | 24.16 | 415 | 19.47 | 1926 | 90.34 | 206 | 9.66 |
| 18. குருநாகல் | 1653 | 595 | 36.00 | 312 | 18.87 | 308 | 18.63 | 302 | 18.27 | 1517 | 91.77 | 136 | 8.23 |
| 19. புத்தளம் | 1779 | 568 | 31.93 | 347 | 19.51 | 428 | 24.06 | 310 | 17.43 | 1653 | 92.92 | 126 | 7.08 |
| 20. அனுராதபுரம் | 789 | 259 | 32.83 | 148 | 18.76 | 175 | 22.18 | 149 | 18.88 | 731 | 92.65 | 58 | 7.35 |
| 21. பொலன்னறுவை | 227 | 88 | 38.77 | 47 | 20.70 | 59 | 25.99 | 29 | 12.78 | 223 | 98.24 | 4 | 1.76 |
| 22. பதுளை | 594 | 179 | 30.13 | 119 | 20.03 | 147 | 24.75 | 93 | 15.66 | 538 | 90.57 | 56 | 9.43 |
| 23. மொனராகலை | 96 | 25 | 26.04 | 19 | 19.79 | 27 | 28.13 | 11 | 11.46 | 82 | 85.42 | 14 | 14.58 |
| 24. இரத்தினபுரி | 231 | 62 | 26.84 | 43 | 18.61 | 59 | 25.54 | 42 | 18.18 | 206 | 89.18 | 25 | 10.82 |
| 25. கேகாலை | 1033 | 444 | 42.98 | 186 | 18.01 | 187 | 18.10 | 133 | 12.88 | 950 | 91.97 | 83 | 8.03 |
| **மொத்தம்** | **23272** | **8582** | **36.88** | **4107** | **17.65** | **4912** | **21.11** | **3704** | **15.92** | **21305** | **91.55** | **1967** | **8.45** |

**அட்டவணை 3**

## 1.2.4 கல்வி வலயங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள முறை :

| மாவட்டம் | | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 2150 | 685 | 31.86 | 340 | 15.81 | 482 | 22.42 | 372 | 17.30 | 1879 | 87.40 | 271 | 12.60 |
| 2. ஹோமாகம | 6 | 1 | 16.67 | 2 | 33.33 | 1 | 16.67 | 2 | 33.33 | 6 | 100.00 | 0 | 0.00 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 85 | 17 | 20.00 | 9 | 10.59 | 20 | 23.53 | 19 | 22.35 | 65 | 76.47 | 20 | 23.53 |
| 4. பிலியந்தல | 121 | 35 | 28.93 | 26 | 21.49 | 22 | 18.18 | 21 | 17.36 | 104 | 85.95 | 17 | 8.33 |
| 5. கம்பஹா | 324 | 147 | 45.37 | 41 | 12.65 | 60 | 18.52 | 49 | 15.12 | 297 | 91.67 | 27 | 8.33 |
| 6 மினுவாங்கொட | 240 | 142 | 59.17 | 33 | 13.75 | 26 | 10.83 | 34 | 14.17 | 235 | 97.92 | 5 | 2.08 |
| 7. நீர்கொழும்பு | 267 | 94 | 35.21 | 46 | 17.23 | 52 | 19.48 | 52 | 19.48 | 244 | 91.39 | 23 | 8.61 |
| 8. களனி | 345 | 105 | 30.43 | 74 | 21.45 | 94 | 27.25 | 47 | 13.62 | 320 | 92.75 | 25 | 7.25 |
| 9. களுத்துறை | 1137 | 464 | 40.81 | 183 | 16.09 | 198 | 17.41 | 187 | 16.45 | 1032 | 90.77 | 105 | 9.23 |
| 10. மத்துகம | 38 | 10 | 26.32 | 6 | 15.79 | 7 | 18.42 | 8 | 21.05 | 31 | 81.58 | 7 | 18.42 |
| 11. ஹொரணை | 137 | 47 | 34.10 | 17 | 12.41 | 19 | 13.87 | 27 | 19.71 | 110 | 80.29 | 27 | 19.71 |
| 12. கண்டி | 627 | 257 | 70.99 | 104 | 16.59 | 117 | 18.66 | 98 | 15.63 | 576 | 91.87 | 51 | 8.13 |
| 13. தெனுவர | 496 | 211 | 42.54 | 79 | 15.93 | 116 | 23.39 | 56 | 11.29 | 462 | 93.15 | 34 | 6.85 |
| 14. கம்பளை | 536 | 162 | 30.22 | 92 | 17.16 | 112 | 20.90 | 108 | 20.15 | 474 | 88.43 | 62 | 11.57 |
| 15. தெல்தெனியா | 30 | 7 | 23.33 | 2 | 6.67 | 7 | 23.33 | 9 | 30.00 | 25 | 83.33 | 5 | 16.67 |
| 16. வத்தேகம | 436 | 139 | 31.88 | 70 | 16.06 | 77 | 17.66 | 86 | 19.72 | 372 | 85.32 | 64 | 14.68 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 862 | 319 | 37.01 | 156 | 18.10 | 166 | 19.26 | 113 | 13.11 | 754 | 87.47 | 108 | 12.53 |
| 18. மாத்தளை | 502 | 216 | 43.03 | 70 | 13.94 | 104 | 20.72 | 72 | 14.34 | 462 | 92.03 | 40 | 7.97 |
| 19. கலேவெவ | 148 | 47 | 31.76 | 35 | 23.65 | 34 | 22.97 | 15 | 10.14 | 131 | 88.51 | 17 | 11.49 |
| 20. நாஉல | 4 | 0 | 0.00 | 2 | 50.00 | 1 | 25.00 | 1 | 25.00 | 4 | 100.00 | 0 | 0.00 |
| 21. வில்கமுவ | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 22. நுவரெலியா | 48 | 4 | 8.33 | 8 | 16.67 | 9 | 18.75 | 15 | 31.25 | 36 | 75.00 | 12 | 25.00 |
| 23. கொத்மலை | 130 | 57 | 43.85 | 24 | 18.46 | 27 | 20.77 | 15 | 11.54 | 123 | 94.62 | 7 | 5.38 |
| 24. ஹட்டன் | 84 | 33 | 39.29 | 14 | 16.67 | 18 | 21.43 | 11 | 13.10 | 76 | 90.48 | 8 | 9.52 |
| 25. வலப்பனை | 9 | 2 | 22.22 | 1 | 11.11 | 3 | 33.33 | 3 | 33.33 | 9 | 100.00 | 0 | 0.00 |
| 26. ஹங்குரன்கெத்த | 4 | 0 | 0.00 | 1 | 25.00 | 2 | 50.00 | 0 | 0.00 | 3 | 75.00 | 1 | 25.00 |
| 27. காலி | 485 | 177 | 36.49 | 68 | 14.02 | 96 | 19.79 | 77 | 15.88 | 418 | 86.19 | 67 | 13.81 |
| 28. எல்பிட்டிய | 23 | 9 | 39.13 | 6 | 26.09 | 4 | 17.39 | 4 | 17.39 | 23 | 100.00 | 0 | 0.00 |
| 29. அம்பலாங்கொடை | 23 | 10 | 43.48 | 4 | 17.39 | 8 | 34.78 | 0 | 0.00 | 22 | 95.65 | 1 | 4.35 |
| 30. உடுகம | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 31. மாத்தறை | 266 | 133 | 50.00 | 32 | 12.03 | 42 | 15.79 | 34 | 17.78 | 241 | 90.60 | 25 | 9.40 |
| 32. அக்குரஸ்ஸ | 75 | 32 | 42.67 | 12 | 16.00 | 13 | 17.33 | 12 | 16.00 | 69 | 92.00 | 6 | 8.00 |
| 33. முலடியன-ஹக்மன | 22 | 10 | 45.45 | 4 | 18.18 | 1 | 4.55 | 4 | 18.18 | 19 | 86.36 | 3 | 13.64 |
| 34. மொறவக்க | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 |
| 35. தங்காலை | 10 | 3 | 30.00 | 5 | 50.00 | 1 | 10.00 | 0 | 0.00 | 9 | 90.00 | 1 | 10.00 |

| கல்வி வலயம் | | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 36. அம்பாந்தோட்டை | 114 | 45 | 39.47 | 22 | 19.30 | 18 | 15.79 | 12 | 10.53 | 97 | 85.09 | 17 | 14.91 |
| 37. வலஸ்முல்லை | 14 | 4 | 28.57 | 3 | 21.43 | 4 | 28.57 | 2 | 14.29 | 13 | 92.86 | 1 | 7.14 |
| 38. யாழ்ப்பாணம் | 13 | 1 | 7.69 | 2 | 15.38 | 2 | 15.38 | 4 | 30.77 | 9 | 69.23 | 4 | 30.77 |
| 39. தீவகம் | 3 | 0 | 0.00 | 2 | 66.67 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 66.67 | 1 | 33.33 |
| 40. தென்மராட்சி | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 41. வலிகாமம் | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 42. வடமராட்சி | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 43. கிளிநொச்சி | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 |
| 44. மன்னார் | 133 | 40 | 30.08 | 19 | 14.29 | 25 | 18.80 | 35 | 26.32 | 119 | 89.47 | 14 | 10.53 |
| 45. மடு | 1 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 1 | 100.00 |
| 46. வவுனியா - தெற்கு | 156 | 36 | 23.08 | 26 | 16.67 | 36 | 23.08 | 47 | 30.13 | 145 | 92.95 | 11 | 7.05 |
| 47. வவுனியா - வடக்கு | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 48. முல்லைத்தீவு | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 49. துணுக்காய் | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 50. மட்டக்களப்பு | 89 | 47 | 52.81 | 15 | 16.85 | 17 | 19.10 | 4 | 4.49 | 83 | 93.26 | 6 | 6.74 |
| 51. கல்குடா | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 52. பட்டிருப்பு | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 1292 | 627 | 48.53 | 266 | 20.59 | 254 | 19.66 | 114 | 8.82 | 1261 | 97.60 | 31 | 2.40 |
| 54. அம்பாறை | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 55. கல்முனை | 1400 | 581 | 41.50 | 246 | 17.57 | 291 | 20.79 | 228 | 16.29 | 1346 | 96.14 | 54 | 3.86 |
| 56. சம்மாந்துறை | 794 | 279 | 35.14 | 115 | 14.48 | 194 | 24.43 | 134 | 16.88 | 722 | 90.93 | 72 | 9.07 |
| 57. மஹாஓய | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 58. தெஹியத்தகண்டிய | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 59. அக்கரைப்பற்று | 1057 | 509 | 48.16 | 226 | 21.38 | 227 | 21.48 | 89 | 8.42 | 1051 | 99.43 | 6 | 0.57 |
| 60. திருகோணமலை | 332 | 93 | 28.01 | 53 | 15.96 | 71 | 21.39 | 70 | 21.08 | 287 | 86.45 | 45 | 13.55 |
| 61. மூதூர் | 607 | 200 | 32.95 | 116 | 19.11 | 146 | 24.05 | 102 | 16.80 | 564 | 92.92 | 43 | 7.08 |
| 62. கந்தளாய் | 122 | 20 | 16.39 | 20 | 16.39 | 38 | 31.15 | 25 | 20.49 | 103 | 84.43 | 19 | 15.57 |
| 63. கிண்ணியா | 1071 | 305 | 28.48 | 189 | 17.65 | 260 | 24.28 | 218 | 20.35 | 972 | 90.76 | 99 | 9.24 |
| 64. குருநாகல் | 377 | 135 | 35.81 | 58 | 15.38 | 72 | 19.10 | 70 | 18.57 | 335 | 88.86 | 42 | 11.14 |
| 65. குளியாப்பிட்டிய | 218 | 69 | 31.65 | 57 | 26.15 | 38 | 17.43 | 37 | 16.97 | 201 | 92.20 | 17 | 7.80 |
| 66 நிக்கவெரட்டிய | 166 | 76 | 45.78 | 38 | 22.89 | 24 | 14.46 | 20 | 12.05 | 158 | 95.18 | 8 | 4.82 |
| 67. மாகோ | 138 | 31 | 22.46 | 21 | 15.22 | 22 | 15.94 | 40 | 28.99 | 114 | 82.61 | 24 | 17.39 |
| 68. கிரியுள்ள | 524 | 212 | 40.46 | 101 | 19.27 | 101 | 19.27 | 82 | 16.65 | 496 | 94.66 | 28 | 5.34 |
| 69. இப்பாகமுவ | 230 | 72 | 31.30 | 37 | 16.09 | 51 | 22.17 | 53 | 23.04 | 213 | 92.61 | 17 | 7.39 |
| 70. புத்தளம் | 1595 | 499 | 31.29 | 317 | 19.87 | 388 | 24.33 | 281 | 17.62 | 1485 | 93.10 | 110 | 6.90 |

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாத-வர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 71. சிலாபம் | 184 | 69 | 37.50 | 30 | 16.30 | 40 | 21.74 | 29 | 15.76 | 168 | 91.30 | 16 | 8.70 |
| 72. அனுராதபுரம் | 276 | 101 | 36.59 | 57 | 20.65 | 57 | 20.65 | 45 | 16.30 | 260 | 94.20 | 16 | 5.80 |
| 73. தபுத்தேகம | 41 | 15 | 36.59 | 3 | 7.32 | 12 | 29.27 | 8 | 19.51 | 38 | 92.68 | 3 | 7.32 |
| 74. கெக்கிராவ | 285 | 96 | 33.68 | 39 | 13.68 | 63 | 22.11 | 63 | 22.11 | 261 | 91.58 | 24 | 8.42 |
| 75. கலென்பின்துனுவெவ | 125 | 28 | 22.40 | 35 | 28.00 | 29 | 23.20 | 21 | 16.80 | 113 | 90.40 | 12 | 9.60 |
| 76. கெபித்திகொல்லாவ | 62 | 19 | 30.65 | 14 | 22.58 | 14 | 22.58 | 12 | 19.35 | 59 | 95.16 | 3 | 4.84 |
| 77. பொலன்னறுவ | 214 | 87 | 40.65 | 45 | 21.03 | 52 | 24.30 | 27 | 12.62 | 211 | 98.60 | 3 | 1.40 |
| 78. ஹிங்குரக் கொடை | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 79. திம்புலாகல | 13 | 1 | 7.69 | 2 | 15.38 | 7 | 53.85 | 2 | 15.38 | 12 | 92.31 | 1 | 7.69 |
| 80. பதுளை | 175 | 63 | 36.00 | 48 | 27.43 | 33 | 18.86 | 17 | 9.71 | 161 | 92.00 | 14 | 8.00 |
| 81. பண்டாரவளை | 114 | 28 | 24.56 | 19 | 16.67 | 27 | 23.68 | 24 | 21.05 | 98 | 85.96 | 16 | 14.04 |
| 82. மஹியங்கனை | 10 | 0 | 0.00 | 0 | 0.00 | 3 | 30.00 | 2 | 20.00 | 5 | 50.00 | 5 | 50.00 |
| 83. வெலிமடை | 256 | 81 | 31.64 | 48 | 18.75 | 70 | 27.34 | 44 | 17.19 | 243 | 94.92 | 13 | 5.08 |
| 84. பசறை | 39 | 7 | 17.95 | 4 | 10.26 | 14 | 35.90 | 6 | 15.38 | 31 | 79.49 | 8 | 20.51 |
| 85. மொனராகலை | 17 | 4 | 23.53 | 2 | 11.76 | 5 | 29.41 | 3 | 17.65 | 14 | 82.35 | 3 | 17.65 |
| 86. வெல்லவாய | 5 | 1 | 20.00 | 1 | 20.00 | 0 | 0.00 | 1 | 20.00 | 3 | 60.00 | 2 | 40.00 |
| 87. பிபிலை | 74 | 20 | 27.03 | 16 | 21.62 | 22 | 29.73 | 7 | 9.46 | 65 | 87.84 | 9 | 12.16 |
| 88. இரத்தினபுரி | 114 | 23 | 20.18 | 22 | 19.30 | 27 | 23.68 | 21 | 18.42 | 93 | 81.58 | 21 | 18.42 |
| 89. பலாங்கொடை | 77 | 24 | 31.17 | 13 | 16.88 | 21 | 27.27 | 15 | 19.48 | 73 | 94.81 | 4 | 5.19 |
| 90. நிவித்திகல | 0 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 | 0 | 0.00 |
| 91. எம்பிலிபிடிய | 40 | 15 | 37.50 | 8 | 20.00 | 11 | 27.50 | 6 | 15.00 | 40 | 100.00 | 0 | 0.00 |
| 92. கேகாலை | 114 | 42 | 36.84 | 24 | 21.05 | 18 | 15.79 | 19 | 16.67 | 103 | 90.35 | 11 | 9.65 |
| 93. மாவனல்லை | 775 | 336 | 43.35 | 139 | 17.94 | 141 | 18.19 | 94 | 12.13 | 710 | 91.61 | 65 | 8.36 |
| 94. தெஹிஓவிட்ட | 144 | 66 | 45.83 | 23 | 15.97 | 28 | 19.44 | 20 | 13.89 | 137 | 95.14 | 7 | 4.86 |
| **மொத்தம்** | **23272** | **8582** | **36.88** | **4107** | **17.65** | **4912** | **21.11** | **3704** | **15.92** | **21305** | **91.55** | **1967** | **8.45** |

**அட்டவணை 4**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 1 | 0.00 | 31348 | 100.00 |
| 81 - 90 | 115 | 0.37 | 31347 | 100.00 |
| 71 - 80 | 694 | 2.21 | 31232 | 99.63 |
| 61 - 70 | 1639 | 5.23 | 30538 | 97.42 |
| 51 - 60 | 2833 | 9.04 | 28899 | 92.19 |
| 41 - 50 | 3839 | 12.25 | 26066 | 83.15 |
| 31 - 40 | 5021 | 16.02 | 22227 | 70.90 |
| 21 - 30 | 5826 | 18.58 | 17206 | 54.89 |
| 11 - 20 | 6081 | 19.40 | 11380 | 36.30 |
| 01 - 10 | 4513 | 14.40 | 5299 | 16.90 |
| 00 - 00 | 786 | 2.51 | 786 | 2.51 |


அட்டவணை 5

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

உ-ம் : புள்ளிகளின் வீச்சினைக் கொள்ளும்போது, இப்பாடத்தில் 71-80 இற்கு இடையிலான புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 694 ஆகும். அதன் சதவீதம் 2.21% ஆகும். 30 புள்ளிகளுக்கு குறைவான புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 17,206 ஆகும். அதன் சதவீதம் 54.89% ஆகும்.

## 1.3. பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் 1 இல் பெறப்பட்டுள்ள அடைவு





**வரைபு** 1

RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. தரப்பட்ட வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் :- மேலே உள்ள வரைபின்படி 1 ஆம் வினாப்பத்திரத்தின், வினா இல. 1,2,3,5,9,11,16,23,24,26,27,28,29,34,35,36,40 ஆகிய பதினேழு வினாக்களுக்கு 70% இற்கும் அதிகமானவர்கள் சரியாக விடையளித்துள்ளனர். வினா இல 10 இற்கு சரியான விடையளித்தோர் 06% ஆகும். அதன்படி வினா இல 10 கடினமான வினாவாக காணப்பட்டுள்ளது. 35ஆம் வினாவுக்கு 93% த்தினர் சரியாக விடையளித்துள்ளதால் இவ்வினா மிகவும் இலகுவானதாக காணப்பட்டுள்ளது.

### 1.3.2 வினாப்பத்திரம் II - வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்.





**வரைபு 2** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்

இது RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் - வினா இல. 01 கட்டாய வினாவாக அமைவதனால் 98% மானவர்கள் தெரிவு செய்துள்ளனர். வினா இல 3ஐ 77% மானோர் தெரிவுசெய்துள்ளதுடன் வினா இல. 5ஐ 42% த்தினர் தெரிவுசெய்துள்ளனர்.

### 1.3. 3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்





**வரைபு 3** - RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்

RD/16/02/OL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு வரைபு 3 தயாரிக்கப்பட்டது. இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம்

1ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும். புள்ளி வீச்சு 00-25% இற்கிடையில் (0-5புள்ளிகள்) 12%த்தினரும், புள்ளி வீச்சு 26-50%இற்கிடையில் (6-10 புள்ளிகள்) 24த்தினரும், புள்ளி வீச்சு 51-75% இற்கிடையில் (11-15 புள்ளிகள்) 35%த்தினரும், புள்ளி வீச்சு 76-100%இற்கிடையில் (16-20 புள்ளிகள்) 29%த்தினரும் பெற்றுள்ளனர்.

## 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்ட அடைவு




வரைபு 4

RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

வினா இல 02 இல் ஒவ்வொரு பகுதிக்கும் சரியாக விடையளித்துள்ளளோர் வீதம் பிரிவு I இற்கு 69% மும் பிரிவு II இற்கு 55%மும் பிரிவு III ற்கு 66% மும் ஆகும்.

## பகுதி II

## 2.0 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு

நேரம் :- 01 மணித்தியாலம்

40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமாகும். ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 40 ஆகும்.

## 2.1.2 வினாப்பத்திரம் I

1. ஒரு முஸ்லிம் சுபஹ் தொழுகையில் கட்டாயமாக ஓத வேண்டிய சூரா
   (1) சூரா இக்லாஸ் (2) சூரா அல்காஷியா (3) சூரா பாத்திஹா (4) சூரா அஸ் ஸஜ்தா

2. உமது ஆடையில் தோய்ந்த நஜீஸை அகற்றுவதற்கோ உமது தாகத்தைத் தீர்ப்பதற்கோ சாதாரணமாகப் பயன்படுத்த முடியாத நீர்
   (1) மாஉன் முத்லக் (2) மாஉன் தாஹிர் (3) மாஉன் தஹூர் (4) மாஉன் முதனஜ்ஜிஸ்

3. அல்லாஹ்வால் மனிதர்களுக்கு ஆகுமாக்கப்பட்ட எனினும் அவனால் மிகவும் வெறுக்கப்படுகின்ற ஒரு செயல்
   (1) ஷிர்க் (2) கொலை (3) குபாஇர் (4) தலாக்

4. ஒரு நற்செயலை மக்களின் பாராட்டு, புகழ் என்பவற்றை எதிர்பார்த்து நிறைவேற்றுவது
   (1) நன்மை தரவல்லது. (2) இணைவைப்புக்குச் சமனானது.
   (3) அல்லாஹ்வின் புகழுக்குரியது. (4) மதம் மாறுவதற்குச் சமனானது.

5. நீர் எதாவது ஒரு மாதத்தில் இரண்டு சுன்னத்தான நோன்புகளை நோற்கவுள்ளீர். அதற்கு மிகப் பொருத்தமான தினங்கள்
   (1) திங்கள், வியாழன் (2) வியாழன், வெள்ளி (3) சனி, ஞாயிறு (4) திங்கள், செவ்வாய்

6. சுற்றாடலை தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருப்பதும் பூமியில் மரங்களை நாட்டி பசுமையைப் பேணுவதும்
   (1) கிலாபத் பணியாகும். (2) இபாதத் பணியாகும். (3) இமாரத் பணியாகும். (4) இராதத் பணியாகும்.

7. வெள்ளிக்கிழமை நாட்களில் ஒரு முஸ்லிம் ஜும்ஆவிற்குச் செல்ல முன் குளிப்பது
   (1) வாஜிப் ஆகும். (2) சுன்னத் ஆகும். (3) பர்ள் ஆகும். (4) மக்ரூஹ் ஆகும்.

8. ஏழைகளின் தாய் என கௌரவ பெயரால் அழைக்கப்பட்டவர்
   (1) ஸைனப் பின்த் ஹுஸைமா (றழி) (2) ஆயிஷா பின்த் அபீபக்ர் (றழி)
   (3) ஹப்ஸா பின்த் உமர் (றழி) (4) கதீஜா பின்த் குவைலித் (றழி)

9. விதவையான ஒரு பெண் இத்தா அனுஷ்டிக்க வேண்டிய கால அளவு
   (1) நாற்பது நாட்கள் (2) நான்கு மாதங்கள்
   (3) நான்கு மாதமும் பத்து நாட்களும் (4) மூன்று மாதங்கள்

10. இஸ்லாமிய நாகரிகம் உச்ச நிலையிலிருந்த இரு நகரங்கள்
    (1) மக்கா, மதீனா (2) கூபா, பஸரா
    (3) காஹிரா, டில்லி (4) கோர்டோவா, பக்தாத்

11. நீர் இரவில் நித்திரைக்குச் செல்ல முன் உமது அன்றைய தினத்தின் செயற்பாடுகள் குறித்து மீள் விசாரணை செய்து கொள்கிறீர். இது
    (1) முஹாஸபா ஆகும். (2) முனாகிஹா ஆகும்.
    (3) இஹ்ஸான் ஆகும். (4) கவ்ப் ஆகும்.

12. முஆவியா (றழி) அவர்கள் ஆரம்பித்து வைத்த ஆட்சி
    (1) அறபு நாட்டில் உமையா ஆட்சி (2) ஸ்பெயினில் உமையா ஆட்சி
    (3) எகிப்தில் பாதிமிய்ய ஆட்சி (4) துருக்கியில் உஸ்மானிய ஆட்சி

13. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ எனப்படுவோர்
    (1) ஈமானுக்கோ செயலுக்கோ முக்கியத்துவம் வழங்காதோர்.
    (2) ஈமானையும் செயலையும் சமநிலையில் நோக்குவோர்.
    (3) ஈமானை விட செயலுக்கு முக்கியத்துவம் கொடுப்போர்.
    (4) செயலை விட ஈமானுக்கு முக்கியத்துவம் கொடுப்போர்.

14. நிரல் **'அ'** இன் கீழுள்ள சொற்களுக்குப் பொருந்தும் விதத்தில் நிரல் **'ஆ'** இல் உள்ளவற்றை ஒழுங்கமைத்தால் பெறப்படும் சரியான ஒழுங்கு வரிசை

| நிரல் 'அ' | நிரல் 'ஆ' |
|---|---|
| (i) புவியியல் | A - அல் கானூன் பித்திப் |
| (ii) கணிதம் | B - கிதாபுல் ஹயவான் |
| (iii) உயிரியல் | C - கிதாபு ஸூரதில் அர்ழ் |
| (iv) மருத்துவம் | D - அல்ஜபர் வல்முகாபலா |

    (1) A, C, B, D (2) C, D, A, B (3) C, D, B, A (4) D, C, B, A

15. ஹஜ்ஜில் இறுதியாக நிறைவேற்றும் தவாப்
(1) தவாபுல் குதூம் (2) தவாபுல் விதா (3) தவாபுல் கஃபா (4) தவாபுஸ் ஸப்ஆ

16. நீங்கள் மனிதர்களுக்கு உதவுகிறீர்கள். ஏழைகளுக்கு வாரி வழங்குகிறீர்கள். உறவினரைச் சேர்ந்து நடக்கிறீர்கள். எனவே அல்லாஹ் உங்களைக் கைவிடமாட்டான் என நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் கூறியவர்
(1) வரகத் பின் நவ்பல் (2) ஹலீமா நாயகி (3) பாத்திமா (றழி) (4) கதீஜா (றழி)

17. ஸகாபாக்களுள் சட்டத்துறையில் இஜ்திஹாத் ஆய்வுப் பணியில் சிறப்புற்று விளங்கியவர்கள்
(1) அபூ ஹுரைரா (றழி), முஆஸ் இப்னு ஜபல் (றழி), ஸல்மானுல் பாரிஸி (றழி), பிலால் (றழி)
(2) ஆயிஷா (றழி), ஸைத் இப்னு ஸாபித் (றழி), முஆவியா (றழி), உஸ்மான் (றழி)
(3) மாலிக் (றஹ்), அபூ ஹனீபா (றஹ்), ஷாபி (றஹ்), அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹ்)
(4) உமர் (றஹ்), அலி (றஹ்), இப்னு அப்பாஸ் (றஹ்), இப்னு மஸ்ஊத் (றஹ்)

18. குற்றங்களின் தன்மை, அது நிகழ்ந்த சூழல், அதன் தாக்கம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு நீதிபதி இஜ்திஹாத் மூலம் வழங்கும் தண்டனை
(1) தஃஸீர் (2) ஹுதூத் (3) கிஸாஸ் (4) தியத்

19. தன்னால் நியமிக்கப்பட்ட ஆறு ஸகாபாக்கள்கூடி தனது மரணத்தின் பின் தமக்கிடையே ஒருவரை கலீபாவாக தெரிவு செய்து கொள்ளும்படி கூறியவர்
(1) அபூபக்கர் (றழி) (2) உமர் (றழி) (3) உஸ்மான் (றழி) (4) அலி (றழி)

20. நபி (ஸல்) அவர்களது கடிதத்தை எகிப்திய மன்னனுக்கு எடுத்துச் சென்ற ஸஹாபி
(1) ஹாதிப் இப்னு அபீ பல்தஆ (றழி) (2) அப்துல்லாஹ் இப்னு ஹுஸைமா (றழி)
(3) திஹிய்யதுல் கல்பி (றழி) (4) அம்ர் இப்னு உமையா (றழி)

21. இலங்கையில் பெரும்பாலான முஸ்லிம்களால் பின்பற்றப்படும் மத்ஹப்
(1) ஹனபி மத்ஹப் (2) ஷாபி மத்ஹப் (3) மாலிகி மத்ஹப் (4) ஹன்பலி மத்ஹப்

22. இஸ்லாமிய சட்டத்துறையில் கியாஸை சட்ட மூலதாரங்களுள் ஒன்றாக அறிமுகப்படுத்தியவர்
(1) இமாம் அஹ்மத் (றஹ்) (2) இமாம் மாலிக் (றஹ்)
(3) இமாம் ஷாபி (றஹ்) (4) இமாம் அபூஹனீபா (றஹ்)

23. இத்தா அனுஷ்டிக்கும் ஒரு பெண் செய்ய அனுமதிக்கப்பட்ட செயல்
(1) விவாகம் செய்தல் (2) திருமணம் பேசுதல்
(3) இரவில் வீட்டிலிருந்து வெளியே செல்லுதல் (4) நோயுற்றால் மருத்துவரைச் சந்தித்தல்

24. பர்ளு ஐனில் அடங்கும் ஒரு செயல்
(1) வைத்தியர்களை உருவாக்குதல் (2) மஸ்ஜித்களை நிர்மாணித்தல்
(3) பெற்றோருக்குக் கீழ்படிதல் (4) சுற்றாடலைப் பாதுகாத்தல்

25. முஸ்லிம்களது முதல் கிப்லாவான மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள இடம்
(1) மக்கா (2) மதீனா (3) கூபா (4) ஜெரூசலம்

26. ஸகாத் விதியாகும் பொருட்கள் அடங்கியுள்ள தொகுதி
(1) தங்கம், வெள்ளி, தோட்டம் (2) வாகனம், தளவாடம், நெல்
(3) கோதுமை, பேரீச்சம் பழம், வீடு (4) ஆடு, தங்கம், பேரீச்சம் பழம்

27. இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் பிரபல்யம் அடைந்திருந்த அறிவுத் துறை
(1) தப்ஸீர் (2) ஹதீஸ் (3) வரலாறு (4) மருத்துவம்

28. நவீன சட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இஸ்லாம் வகுத்துள்ள வழிமுறை
(1) வாக்கெடுப்பு (2) சூரா (3) இஜ்திஹாத் (4) தஃவா

29. இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாவதற்கு நேரடிக் காரணமாக அமைந்தவர்கள்
(1) ஸகாபாக்கள் (2) அறபு ஆட்சியாளர்கள்
(3) அறபு வர்த்தகர்கள் (4) ஆத்மீக ஞானிகள்

30. இஸ்லாமிய உளவியல் பற்றிய ஆய்வுகளை முன்வைத்தவர்
(1) இமாம் மாலிக் (ரஹ்) (2) 'அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)
(3) இமாம் ஸமக்ஷரி (ரஹ்) (4) இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

31. உம்ராவின் அர்கான்களில் **அடங்காத** ஒரு கிரியை
   (1) தவாப் செய்தல்
   (2) அரபாவில் தரித்தல்
   (3) ஸஃயு செய்தல்
   (4) தலைமுடி சிரைத்தல்

32. பின்வருவனவற்றுள் காலம் வரையறுக்கப்பட்ட இரு நற்செயல்கள்
   (1) பித்ரா - ஸதகா
   (2) உழ்ஹிய்யா - ஹிபத்
   (3) உழ்ஹிய்யா - பித்ரா
   (4) அகீகா - ஸதகா

33. ஷவ்வால் தலைப்பிறை தென்பட்டால் அந்நாளில் பின் நோன்பு நோற்பது
   (1) ஹராம்
   (2) மக்ரூஹ்
   (3) வாஜிப்
   (4) ஜாஇஸ்

34. 'அஹ்லுல் பைத்' என்பதன் மூலம் கருதப்படுவது
   (1) நபி (ஸல்) அவர்களது குடும்பத்தினர்
   (2) நபி (ஸல்) அவர்களது அற்புதங்கள்
   (3) நபி (ஸல்) அவர்களது தோழர்கள்
   (4) முன்னைய வேதங்களைப் பின்பற்றுவோர்

35. பொருளால் நிறைவேற்றப்படும் ஓர் இபாதத்
   (1) கலிமா
   (2) ஸலாத்
   (3) நோன்பு
   (4) ஸகாத்

36. அல்குர்ஆனில் இறுதி நபி என்ற கருத்தை உணர்த்தும் சொற்றொடர்
   (1) ரஹ்மதுன் லில் ஆலமீன்
   (2) ஹாதமுன் நபிய்யீன்
   (3) ஷபீஉல் முஸ்னிபீன்
   (4) ஸய்யிதுல் முர்ஸலீன்

37. கட்டாயம் ஜமாஅத்துடனேயே நிறைவேற்ற வேண்டிய தொழுகை
   (1) தராவீஹ்
   (2) ஜனாஸா
   (3) பெருநாள்
   (4) ஜும்ஆ

38. 'பைதுல் ஹிக்மா' எனும் அறிவகத்தை நிறுவி கல்விப் பணி செய்த கலீபா
   (1) கலீபா மஃமூன்
   (2) கலீபா முதவக்கில்
   (3) கலீபா ஹாரூன் ரஷீத்
   (4) கலீபா முஆவியா

39. உலகில் இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சியடைந்த ஆண்டு
   (1) கி.பி. 1505
   (2) கி.பி. 1806
   (3) கி.பி. 1924
   (4) கி.பி. 1948

40. ஒரு முஸ்லிம் வுழுவின்றி செய்யக் **கூடாத** ஒரு செயல்
   (1) தொழுதல்
   (2) குர்ஆன் ஓதுதல்
   (3) இஃதிகாப் இருத்தல்
   (4) தவ்பாக் கேட்டல்

2.1.3. எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01 | ...3... | 21 | ...2... |
| 02 | ...4... | 22 | ...4... |
| 03 | ...4... | 23 | ...4... |
| 04 | ...2... | 24 | ...3... |
| 05 | ...1... | 25 | ...4... |
| 06 | ...3... | 26 | ...4... |
| 07 | ...2... | 27 | ...2... |
| 08 | ...1... | 28 | ...3... |
| 09 | ...3... | 29 | ...3... |
| 10 | ...4... | 30 | ...4... |
| 11 | ...1... | 31 | ...2... |
| 12 | ...1... | 32 | ...3... |
| 13 | ...2... | 33 | ...1... |
| 14 | ...3... | 34 | ...1... |
| 15 | ...2... | 35 | ...4... |
| 16 | ...4... | 36 | ...2... |
| 17 | ...4... | 37 | ...4... |
| 18 | ...1... | 38 | ...1... |
| 19 | ...2... | 39 | ...3... |
| 20 | ...1... | 40 | ...1... |

ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40 புள்ளிகள்

### 2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும்

✶ **வரைபு 1 இலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.**

- வினாப்பத்திரம் I இற்கான விடையளித்த விதம் தொடர்பான வீதம்பற்றி நோக்கும்போது 01,02,03,05,09,11,16,23,24,26,27,28,29,34,35,36,40 ஆகிய பதினேழு வினாக்களுக்கும் 70% பரீட்சார்த்திகள் அல்லது அதற்கு மேற்பட்டோர் சிறப்பாகப் பதிலளித்துள்ளனர். வினா இல 06,10,20,38 ஆகியவற்றுக்கு 30% இற்கு குறைவானவர்களே சரியாக விடையளித்துள்ளனர்.

- வினா இல 14,17,19,22,30,31,39 ஆகியவற்றுக்கு சரியான விடையளித்த பரீட்சார்த்திகளின் வீதம் 30% - 50% இற்கு இடைப்பட்டதாகும்.

- வினா இல 4,7,12,13,15,18,21,25,32,33,37 ஆகியவைகளுக்கு 50-70% ஆனோர் சரியாக விடையளித்துள்ளனர்.

- வினா இல 10,20,38 ஆகியவைகளுக்கு விடையளித்த பரீட்சார்த்திகளின் வீதம் 30 இலும் மிகக் குறைவாகக் காணப்படுவதற்குரிய காரணம் இஸ்லாமிய வரலாறு, கலாசாரம் தொடர்பான அறிவு மிகக் குறைவாகக் காணப்படுவதே ஆகும். வினா இல. 10 இற்கு சரியாக விடையளித்தோர் வீதம் 6% ஆகும்.

- அதுமட்டுமன்றி பாடப்புத்தகத்தின் கடைசிப் பகுதியிலமைந்த இஸ்லாமிய கண்ணோட்டம் தொடர்பாகவும் போதியளவு அறிவு மாணவர்களுக்கு இல்லாமையை காணமுடிந்தது.

## 2.2 வினாப்பத்திரம் II ற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு

- நேரம் :- 2 மணித்தியாலங்கள் வழங்கப்படும் புள்ளிகள் 60 ஆகும்.

- முதலாம் வினா கட்டாயமானது. குறுவிடை வினாக்களைக் கொண்டது. முதலாம் வினா 10 பகுதிகளைக் கொண்டது. ஒரு பகுதிக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். ஏனைய கட்டமைப்பு வகை வினாக்கள் 6 இல் 4 இற்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 10 புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் 40 ஆகும்.

## 2.2.2. வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

**வினா இலக்கம் 1**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

**1.** சுருக்கமான விடை தருக.

(i) ரமழானில் நிறைவேற்றப்படும் சுன்னத்தான **இரு** முக்கிய கிரியைகளைக் குறிப்பிடுக.
(ii) நோன்பின் **இரு** பர்ளுகளையும் குறிப்பிடுக.
(iii) இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள முக்கிய உரிமைகள் **இரண்டை** எழுதுக.
(iv) பொருளீட்டலில் இஸ்லாம் விலக்கியுள்ள **இரு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.
(v) ஒரு முஸ்லிமுக்கு குளிப்பு வாஜிபாகும் **இரு** சந்தர்ப்பங்களைத் தருக.
(vi) இமாம் ஷாபி (றஹ்) அவர்களது **இரு** நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
(vii) 'கியாஸ்' என்பதன் வரைவிலக்கணம் யாது ?
(viii) ஹதீஸ் என்ற பதத்தின் விளக்கம் யாது ?
(ix) ஓர் இஸ்லாமியப் பெண்ணின் அவ்ரத் யாது ?
(x) கலீபா அபூபக்கர் (றழி) அவர்கள் தனது ஆட்சியில் எதிர்நோக்கிய **இரு** முக்கிய சவால்களைக் குறிப்பிடுக.

## 2.2.3 எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

**வினா 1**

(i)
- ஸஹர் செய்தல்
- (இப்தார்) நோன்பு துறத்தல்
- நோன்பு துறந்ததும் துஆ கேட்டல்
- அல் குர்ஆன் திக்ருகளை அதிகமாக ஓதுதல்.
- நோன்பாளிகளுக்கு நோன்பு துறக்க உதவுதல்.
- றமழான் மாத இரவுகளில் தராவீஹ் , கியாமுல் லைல் போன்ற வணக்கங்களில் ஈடுபடுதல்.
- மஸ்ஜிதில் இ∴திகாப் இருத்தல் (பிந்திய பகுதி 10 நாட்கள்)

இவை போன்ற ஸுன்னத்தான கிரியைகள் எழுதப்பட்டிருப்பின் ஒன்றுக்கு 1 புள்ளி விதம் வழங்கவும்.
1 x 2 = 2 புள்ளிகள்

(ii)
- நிய்யத் வைத்தல்
- கிழக்கு வைகறை தொடக்கம் சூரியன் அஸ்தமிக்கும் வரை நோன்பை முறிக்கும் காரியங்களில் ஈடுபடாது இருத்தல்.

1 x 2 = 2 புள்ளிகள்

(iii)
- கல்வி கற்கும் உரிமை
- பேச்சுரிமை
- தொழில் செய்யும் உரிமை
- சுதந்திரமாக வாழும் உரிமை
- திருமணம் முடிப்பதற்கான உரிமை
- அனந்தரச் சொத்தில் பங்கு பெறும் உரிமை போன்றவை.

(iv)
- வட்டி
- அளவை நிறுவை மோசடி
- பொய்ச் சத்தியம்
- கலப்படம்
- பதுக்கல் போன்றவை

(v)
- ஒரு முஸ்லிம் மரணித்தல்.
- விந்து வெளியாதல்.
- ஆண்பெண் உடலுறவு கொள்ளல்.
- ஹைல் மாதாந்த ருது வெளியாதல்.
- நிபாஸ் உண்டாதல் போன்றவை.

(vi)
- கிதாபுல் உம்மு
- அர் ரிஸாலா
- அல் முஸ்னத்
- அஹ்காமுல் குர்ஆன்
- ஜிமாஉல் இல்ம்

(vii)
- அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, அல் இஜ்மாஉ ஆகிய சட்ட மூலாதாரங்கள் மூலம் அல்லது அவற்றுள் ஒன்று மூலம் ஏற்கனவே பெறப்பட்ட ஓர் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு புதியதொரு பிரச்சினையை ஒப்பு நோக்கி கண்டறிகின்ற முடிவே கியாஸ் எனப்படும்.

(viii) நபி (ஸல்) அவர்களின் சொல் செயல் அங்கீகாரம் மற்றும் குண நலன்களை உள்ளடக்கியவைகளே ஹதீஸ் எனப்படும்.
(கௌலி, பியலி, தக்ரீரீ)

(ix) ஒரு பெண்ணின் முகம், இரு கைகளின் மணிக்கட்டுகளைத் தவிர உள்ள உடலுறுப்புக்கள்.

(x)
- போலி நபிமார்களின் தோற்றம்
- ஸகாத் கொடுக்க மறுத்தமை
- மதம் மாற்றம்

இது ஒரு கட்டாய வினாவாகும். ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் $2 \times 10 = 20$ புள்ளிகள் வழங்கப்படும்.

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்

இது கட்டாய வினாவாகும். 98% பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். (வரைபு 1 இன் படி). இது 10 பகுதி வினாக்களை உள்ளடக்கியுள்ளது. அவற்றிற்கு விடையளிக்கப்பட்டுள்ள விதம் பின்வருமாறு.

- பிரிவு i - 84% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர். இதன் மூலம் நோன்பு பற்றிய அறிவு போதியளவு மாணவர்களிடம் காணப்படுகின்றமை தெளிவாகின்றது.

- பிரிவு ii - 63% த்தினர் விடையளித்துள்ளனர். இதுவும் மிக இலகுவான வினாவாகும். ஆதலால் 63% த்தினர் சரியாக விடையளித்துள்ளனர்.

- பிரிவு iii - 85% த்தினர் இப்பிரிவுக்கு சரியாக விடையளித்துள்ளனர். இதுவும் மிக இலகுவான வினாவாகையால் அதிகமானோர் விடையளித்துள்ளனர்.

- பிரிவு iv - 55% த்தினர் இவ்வினாவுக்கு சரியாக விடையளித்துள்ளனர். இதன் மூலம் அன்றாட வாழ்க்கையில் பழக்க வழக்கங்கள் தொடர்பான அதிக விளக்கம் மாணவர்களிடம் இல்லாமையே இதற்கான காரணமாகும்.

- பிரிவு v - 53% த்தினர் சரியாக விடையளித்துள்ளனர்.

- பிரிவு vi - இதற்கு சரியாக விடையளித்தவர்கள் 43% த்தினர் ஆகும். இஸ்லாமிய உஸூலுல் பிக்ஹ் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

- பிரிவு vii - இதற்கு சரியாக விடையளித்தவர்கள் 33% த்தினர் ஆகும். மிகக் குறைந்த வீதத்தினர் விடையளித்துள்ள வினா இதுவாகும். இங்கு கியாஸ் தொடர்பான அறிவு மாணவர்களுக்கு சரியாக வழங்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

- பிரிவு viii - 71% த்தினர் மட்டுமே சரியாக விடையளித்துள்ளனர். அதற்கேற்ப ஹதீஸ் என்ற பதத்தின் விளக்கம் அதிகமாக காணப்படுகின்றமை தெளிவாகின்றது.

- பிரிவு ix - இவ்வினா இஸ்லாமிய பெண்களின் அவ்ரத் தொடர்பான வினாவாகும். இது மிகவும் இலகுவான வினாவாகும். எனினும் இதற்கு 59% த்தினரே விடையளித்துள்ளனர்.

- பிரிவு x - இவ்வினாவுக்கு 58% த்தினரே சரியாக விடையளித்துள்ளனர்.

இவ்வினாவிற்குரிய 10 வினாக்களில் 08 வினாக்களுக்கு 50% இற்கு மேற்பட்டோர் சரியாக விடையளித்திருந்தனர். 50% இற்குக் குறைவாக புள்ளிகள் பெறப்பட்டுள்ள வினாக்களில் கிரந்தங்கள் தொடர்பான vi ஆம் வினாவுக்கும் கியாஸு தொடர்பான vii ஆம் வினாவுக்கும் சரியாக பதிலளிக்கப்படாததன் காரணமாக இவ்விரு வினாக்களுக்கும் சரியான விடையளித்தோர் வீதம் 50% இலும் குறைவாகக் காணப்படுகிறது.

**வினா இலக்கம் 2**

**2.** (i) *அகீதாவை மையமாகக் கொண்டு தோன்றிய* **இரு** *முக்கிய பிரிவுகளைக் குறிப்பிடுக.*
(ii) *நிபாக் என்ற பதத்தை விளக்கி முனாபிகின் முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக.*
(iii) *பெரும் பாவங்கள் என நபி ஸல் அவர்களால் எச்சரிக்கப்பட்ட அம்சங்கள் யாவை ?*

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i)
- மு.∴தஸிலா
- கத்ரிய்யா
- ஜபரிய்யா
- கவாரிஜ்கள்
- முர்ஜிஆக்கள்
- பாதினிகள்
- அஹ்மதிய்யாக்கள் (காதியானிகள்)

(இவை இரண்டும் எழுதப்பட்டிருப்பின் 1 x 2 = 2 புள்ளிகள்)

(ii) நிபாக் என்பதன் கருத்து நயவஞ்சகத்தனம் ஆகும். உள்ளத்தில் குப்ரை மறைத்து வைத்துக்கொண்டு வெளியில் ஈமான் கொண்டவன்போல் நடப்பதாகும். அவனின் அடையாளங்கள்.

- பேசினால் பொய் பேசுவான்
- வாக்களித்தால் மாறு செய்வான்
- நம்பினால் துரோகம் செய்வான்

(விளக்கம் 1 புள்ளி, பண்புகளுக்கு 2 புள்ளி, 1 + 2 = 3 புள்ளிகள்)

(iii)
- பொய்ச் சத்தியம் செய்தல்
- பெற்றோரைத் துன்புறுத்தல்
- விபச்சாரம் புரிதல்
- குழந்தைகளைக் கொல்லுதல்
- யுத்த களத்திலிருந்து பின்வாங்குதல்
- சூதாட்டம்
- பட்டப்பெயர் சூட்டல்
- மதுபானம் அருந்துதல்
- களவெடுத்தல் போன்றவை

(1 X 5 = 5 புள்ளிகள்)
(மொத்தம் 2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

## விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்

அல் அகாயித் மூலம் நம்பிக்கை தொடர்பாகவும், முரணாக தோன்றிய அகீதாபிரிவினர் தொடர்பாகவும், அதனை மறுப்பதன் மூலம் அதற்கு மறைமுகமாக செயற்படுபவர்கள் தொடர்பாகவும் வினா அமைந்துள்ளது. இங்கு அகீதா என்றால் என்ன? எனும் அடிப்படை அறிவை பரீட்சிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் அதன் மூலம்

- அகீதாவை மையமாகக் கொண்ட இரு பிரிவுகளும்
- நிபாக் எனும் பதம் நயவஞ்சகர்களின் அடையாளங்களும்
- நபியவர்களால் பெரும் பாவமாகக் கருதப்பட்ட செயல்கள் தொர்பான அறிவும் எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வினாவைத் தெரிவு செய்தவர்கள் அதிகமாகக் காணப்படினும் சரியாக விடையளித்த வீதம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளி 10 ஆகும். 38% த்தினர் 8-10 புள்ளிகளையும், 23% த்தினர் 6-7 புள்ளிகளையும், 29% த்தினர் 3-5 புள்ளிகளையும், 12% த்தினர் 0-2 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.
(வரைபு 3 இன்படி)
இவ்வினாக்களில்,

பிரிவு I இற்கு 69%
பிரிவு II இற்கு 55%
பிரிவு III இற்கு 66% த்தினர் சரியான விடையளித்துள்ளனர்.

இங்கு நிபாக் எனும் பதத்தை விளக்கி முனாபிக்கின் முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக. எனும் வினாவுக்கு பண்புகளை மட்டும் குறிப்பிட்டு நிபாக் எனும் பதத்துக்கு விளக்கம் தராமையினால், மாணவர்கள் புள்ளிகளை இழக்கக் காரணமாயிருந்தது.

### வினா 3

**3.** (i) *தொழுகையின் சிறப்புகள் யாவை ?*
(ii) *ஸகாத் பெறத்* ***தகுதியற்றோர்*** *யாவர் ?*
(iii) *சுன்னத்தான நோன்பு நோற்கக்கூடிய நாட்களைப் பட்டியலிடுக.*

(i)
- தொழுகை அதி முக்கிய கடமைகளில் ஒன்றாகும்.
- தொழுகை மானக்கேடான வெறுக்கத்தக்க விடயங்களில் இருந்து மனிதனை தடுக்கிறது.
- மறுமையில் ஒரு அடியானிடம் முதலில் விசாரிக்கப்படுவது தொழுகையாகும்.
- அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துவது தொழுகை
- குப்ருக்கும், ஈமானுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் தொழுகையை விடுதல்.
- தொழுகையை விட்டவன் மறுமையில் பிர்அவ்ன், ஹாமான் போன்ற கொடியவர்களுடன் எழுப்பப்படல்.
- தொழுகை ஒரு மனிதனில் உடல் உளத்தூய்மையை ஏற்படுத்துகின்றது.
- தொழுகை சுவர்க்கத்தின் திறவுகோல். (1/2 x 4 = 2 புள்ளிகள்)

(ii)
- செல்வந்தர்கள்
- உரிமைச் சீட்டு எழுதப்படாத அடிமைகள்
- பனூ ஹாசிம் பனூ முத்தலிப் வம்சத்தினர்.
- ஸகாத் கொடுப்பவரது பொறுப்பிலுள்ளோர்
- முஸ்லிம் அல்லாதோர். ( ஒன்றுக்கு 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)

(iii) • வாராந்தம் நோற்கக்கூடியவை
திங்கள், வியாழன்

• மாதாந்தம் நோற்கக்கூடியவை
துல்ஹஜ் மாதம் தவிர்ந்த ஏனைய மாதங்களில்

- அய்யாமுல் பீழ், 13, 14, 15, பிறைகளில்
- அய்யாமுல் சூத் 27, 28, 29, 30 பிறைகளில்

• வருடாந்தம் நோற்கக்கூடியவை
துல்ஹஜ் மாதம் தவிர்ந்த ஏனைய மாதங்களில்

- நோன்புப் பெருநாளை அடுத்துவரும் ஷவ்வால் மாத ஆறு நோன்புகள்
- முஹர்ரம் 9, 10 பிறைகளில்
- துல்ஹஜ் பிறை 1-8 வரை
- ஷபான் மாதம் பெரும்பாலான நாட்கள்

(வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம் என குறிப்பிட்டிருந்தால் 2 புள்ளிகளும் அவைகளுக்கு உ-ம் எழுதியிருந்தால் 3 புள்ளிகள் 2 + 3 = 5 புள்ளிகள்)

(மொத்தம் 2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

இவ்வினாவிற்கு அல்இபாதத் எனும் "வாழ்க்கையே ஒரு வணக்கம்" எனும் அடிப்படையில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவர், என்பதனைக் கொண்டே விடையளிப்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரிவு I தொழுகையின் சிறப்பு
பிரிவு II ஸகாத்பெற தகுதியற்றோர்
பிரிவு III ஸுன்னத்தான நோன்பு நோற்கும் நாட்கள்

ஆகியன தொடர்பான அறிவு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களுள் 77 த்தினர் மாத்திரம் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவுக்கு விடையளித்தவர்களில் 25% த்தினர் 8-10 புள்ளிகளையும், 22% த்தினர் 6-7 புள்ளிகளையும், 38% த்தினர் 3-5 புள்ளிகளையும், 16% த்தினர் 0-2 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். (வரைபு 3 இன்படி)

வரைபு 4 இன்படி இதன் எல்லாப் பிரிவுகளுக்கும் விடையளித்த விதம் பின்வருமாறு

பிரிவு I இற்கு 85%
பிரிவு II இற்கு 54%
பிரிவு III இற்கு 47% த்தினர் சரியான விடையளித்துள்ளனர்.

இதன் மூலம் தொழுகையின் சிறப்புக்கள் பற்றி மிகவும் பரந்த அறிவும், ஸகாத் பெறத் தகுதியற்றவர்கள் பற்றிய சாதாரண அறிவும் மாணவர்களிடம் காணப்படுகின்றது. சுன்னத் நோன்பு தொடர்பாக சரியாக விடையளித்தோர் 47% த்தினர் ஆகும். எனினும் பரீட்சார்த்திகள் வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம் என மூன்றாகப் பிரித்து விடை எழுதாமையால் புள்ளிகளை இழந்துள்ளனர். ஆதலால் பட்டியற் படுத்துக போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் போது தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிப்பதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டப்பட வேண்டும்.

**வினா இலக்கம் 4**

**4.** (i) பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் யாவை ?
(ii) ஒரு மனைவி கணவனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் யாவை ?
(iii) ஒரு நிகாஹ் செல்லுபடியாவதற்கான நிபந்தனைகள் யாவை ?

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**வினா இல 04**

(i)
- பிள்ளை பிறந்து 7 ஆம் நாள் அகீகா கொடுத்தல்.
- நற்பெயர் சூட்டுதல்
- நற்பண்புகளையும் நல்லொழுக்கத்தையும் கற்பித்தல்
- உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு வழங்குதல்
- சிறந்த கல்வியை அளித்தல் போன்றவை

(1/2 x 4 = 2 புள்ளிகள்)

(ii)
- கணவனுக்கு பணிவுடன் நடந்து கொள்ளல்
- கணவனின் பொருட்களைப் பாதுகாத்தல்
- கணவன் விரும்பாத எவரையும் வீட்டில் அனுமதிக்காது இருத்தல்
- மார்க்கத்திற்கு முரணில்லாத விடயங்களில் கணவனுக்கு கட்டுப்பட்டு நடத்தல்
- கணவனின் சுக துக்கங்களில் மனங்கோணாது நடந்து கொள்ளல்
- கணவனின் தேவைகளை அறிந்து அதை நிறைவேற்றல்
- கணவன் தனது தேவைக்காக அழைக்கும்போது இணங்குதல்.
- கணவனின் இரகசியங்களைப் பாதுகாத்தல்
- தனது கற்பைப் பாதுகாத்தல்

(iii)
- மணமகன் - மணமகள்
- ஈஜாப், கபூல்
- வலி
- இரண்டு சாட்சிகள்
- மஹர்

(5 புள்ளிகள்)

(மொத்தம் 2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்**

இவ்வினா இஸ்லாமிய மார்க்க சட்டங்களுடனும் குடும்ப வாழ்வுடன் தொடர்பான திருமணம், கணவன், மனைவி பெற்றோர் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

இதன் மூலம்
- பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள்,
- கணவனுக்கு மனைவி செய்ய வேண்டிய கடமைகள்,
- திருமணத்துக்கான நிபந்தனைகள்

பற்றி கண்ணோட்டம் செலுத்துவது எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வினாவை அதிகமான பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ளனர். கட்டாய வினா இல 01இற்கு அடுத்ததாக அதிக மாணவர்கள் தெரிவு செய்த இரண்டாவது வினாவாக இது காணப்படுகின்றது. இதனை 88% த்தினர் தேர்ந்தேடுத்துள்ளனர். (வரைபு 2 இன்படி)

இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 8-10 புள்ளிகளை 51% த்தினரும், 6-7 புள்ளிகளை 15% த்தினரும், 3-5 புள்ளிகளை 28% த்தினரும் 0-2 புள்ளிகளை 7% த்தினரும் பெற்றுள்ளனர். ஏனைய வினாக்களைவிட இவ்வினாவிற்கே அதிக புள்ளிகள் பெற்றுள்ளனர். (வரைபு 3 இன்படி)
பகுதி I 92%
பகுதி II 88%
பகுதி III 67% த்தினரும் சரியான விடையளித்துள்ளர்.

இதன்படி குடும்ப வாழ்வு, திருமணம் கணவன் மனைவி கடமைகள் தொடர்பான அறிவு மாணவர்களிடம் சிறப்பாக காணப்படுகின்றது.

**வினா இலக்கம் 5**

**5.** (i) *ஹஜ் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் கிடைக்கும் பயன்கள் யாவை ?*
(ii) *நபி (ஸல்) அவர்களது அரபா பேருரையில் அடங்கியிருந்த முக்கிய அம்சங்கள் யாவை ?*
(iii) *ஹுதைபிய்யா உடன்படிக்கையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.*

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**வினா 05**

(i)
- அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிதல்.
- உள்ளம் உடல் பொருள் ஆகியன மூலம் தனது அடிபணிதலை வெளிப்படுத்தல்
- உலக இஸ்லாமிய சகோதரத்துவத்தை உறுதிப்படுத்தல்.
- பாவம், வறுமை என்பவற்றை அகற்றிவிடும்.
- தயாளம் சகிப்புத்தன்மை ஏற்படும்.
- சமூகத்தில் இன, மொழி, நிறம் போன்ற வேறுபாடுகளை நீக்கும்.
- தீய வார்த்தைகள் பேசுதல், தவிர்த்தல் போன்ற விடயங்கள் அகன்றுவிடும்.
- ஹஜ் செய்வதன் மூலம் அன்று பிறந்த பாலகன் போன்று ஆகிவிடும்.

(1/2 x 4 = 2 புள்ளிகள்)

(ii)
- அவரவர் குற்றத்திற்கு அவரவரே பொறுப்பேற்க வேண்டும்
- வட்டி தடை செய்யப்பட்டுள்ளது.
- ஜாஹிலிய்யாக் கால பழிவாங்கும் பழக்கம் இருக்கக் கூடாது.
- சமத்துவமும் சகோதரத்துவமும் வலியுறுத்தப்பட்டமை.
- அல்குர்ஆனையும் அல்ஹதீஸையும் பின்பற்றுமாறு வலியுறுத்தியமை.
- இங்கு வராதவர்களுக்கு வந்தவர்கள் இவ்விடயங்களை எத்திவையுங்கள்

(1 x 3 = 3 புள்ளிகள்)

(iii) • பத்து வருடங்கள் வரை இருசாராரும் போர்புரிவதில்லை.

- எத்தகைய அச்சமுமின்றி இரு தரப்பினரும் நாட்டில் வாழ வேண்டும்.
- முஸ்லிம்கள் இவ்வருடம் மக்காவில் பிரவேசிக்கக்கூடாது. அடுத்த வருடம் மக்காவுக்கு நிராயுதபாணிகளாக வந்து மூன்று தினங்கள் தங்கியிருக்கலாம். அம்மூன்று தினங்களிலும் குறைசியர் வெளியே சென்று விடுவர்.
- குறைஷியரில் எவரேனும் உத்தரவின்றி மதீனாவுக்கு வந்துவிட்டால் அவரை திருப்பி அனுப்பிவிட வேண்டும். அதற்கு மாறாக முஸ்லிம்களில் எவரும் மக்காவுக்கு வந்துவிட்டால் அவர்கள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்.
- இரு பிரிவினரும் தத்தமக்குரிய வேறு கோத்திரத்தாருடனே சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளலாம்.
- குறைஷியரின் ஆதரவாளர்களை முஸ்லிம்கள் எதிர்ப்பது கூடாது. அவ்வாறே முஸ்லிம்களின் ஆதரவாளர்களையும் குறைஷியர் எதிர்ப்பது கூடாது.

(1 புள்ளிகள் வீதம் 5 புள்ளிகள் = 5 புள்ளிகள்)

(மொத்தம் 2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்**

இது "வாழ்வே வணக்கம்" எனும் அடிப்படையில் கொடுக்கப்பட்ட வினாவாகும்.

- ஹஜ் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் கிடைக்கும் பயன்
- அக்கடமையின் போது நபி (ஸல்) அவர்கள் கூறிய போதனைகள்
- ஹஜ்ஜுக்காக செல்லும்போது காபிர்களுடன் செய்து கொண்ட ஹுதைபியா உடன்படிக்கையில் இடம் பெற்ற அம்சங்கள் பற்றி இவ்வினா அமைந்தது.

இவ்வினாவிற்கு மிகக் குறைவான பரீட்சார்த்திகளே விடையளித்துள்ளனர். அதன் வீதம் 42% ஆகும். (வரைபு 2 இன்படி)
இவ்வினாவிற்கான மொத்தம் 10 புள்ளிகளில் 8-10 புள்ளிகளை 42% த்தினரும், 6-7 புள்ளிகளை 12% த்தினரும், 3-5 புள்ளிகளை 27% த்தினரும் 0-2 புள்ளிகளை 18% த்தினரும் பெற்றுள்ளனர். (வரைபு 3 இன்படி) இவ்வினாவுக்கான 3 பகுதிகளுக்கும் சரியான விடையளித்தோர் வீதம்

| | |
|---|---|
| பகுதி I | 92% |
| பகுதி II | 67% |
| பகுதி III | 60% |

இம்மூன்று பகுதிகளுக்கும் மொத்தமாக விடையளித்த முறையை நோக்கும்போது 60% ற்கும் மேற்பட்டோர் மூன்று பகுதிகளுக்கும் விடையளித்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. இங்கு முதலாம் பிரிவிற்கு ஹஜ் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் கிடைக்கும் பயன்கள் எவை? எனும் வினாவிற்கு மிகவும் சரியாக விடையளித்துள்ளனர். அதேபோல் அரபா பேருரையில் உள்ளடங்கியிருந்த முக்கிய அம்சங்கள், ஹுதைபிய்யா உடன்படிக்கையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளிடம் சிறந்த அறிவு காணப்படுகின்றமையை இது வெளிக்காட்டுகின்றது.

**வினா 06**

6. (i) இஸ்லாம் உழைப்புக்கு வழங்கியுள்ள முக்கியத்துவம் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(ii) வட்டிக்கும் வியாபாரத்துக்குமிடையிலான வேறுபாடுகளைப் பட்டியற்படுத்துக.
(iii) வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் தவிர்க்கப்பட வேண்டியவை யாவை ?

(i)
- ஒருவன் தன் கைகளால் உழைத்து உண்பதை விட வேறு எந்த சிறந்த உணவையும் எவரும் கொண்டதில்லை. (புகாரி)
- மனிதனுக்காக இப்பூமியை விரிப்பாகப் படைத்த அல்லாஹ் அதனது பல கோணங்களிலும் சென்று அவனளித்தவைகளை புசிப்பீராக எனப் பணிகின்றான்.
- அல்-குர்ஆன், ஜிஹாதையும் உழைப்பையும் ஒன்றாக இணைத்துக் கூறுகிறது.
- வாழ்வதற்காக அனைத்து நபிமார்களும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.
- ஹிஜ்ரத் மேற்கொண்ட ஸஹாபாக்களில் சிலர் மதீனா வாசிகளின் அன்பளிப்புக்களை ஏற்காது வியாபாரம் செய்ய சந்தையைக் காட்டித் தருமாறு கேட்டனர்
- கூலிக்காரனுடைய கூலியை அவனது வியர்வை உலர்வதற்கு முன் கொடுத்து விடுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளமை.
- உழைத்து வடுவேறிய ஒரு தொழிலாளியை நபி அவர்கள் முஸாபஹாச் செய்து நீண்ட நேரம் கையைப் பிடித்துக் கொண்டிருந்தமை.
- யாசகம் கேட்டு வந்த நபித் தோழருக்கு ஒரு கோடரியை வாங்கிக் கொடுத்து தொழில் செய்து வாழுமாறு ஊக்கப்படுத்தியமை.

(1 x 2 = 2 புள்ளிகள்)

(ii)
- வியாபாரத்தை அல்லாஹ் ஹலாலாக்கியுள்ளான் வட்டியை ஹராமாக்கியுள்ளான்.
- வட்டி இலாபத்தை மாத்திரம் நோக்காகக் கொண்டது. வியாபாரம் இலாபம், நட்டம் இரண்டையும் கொண்டது.
- வட்டியில் ஒரு மூலதனத்துக்கு பல முறை இலாபம் பெறப்படும், வியாபாரத்தில் ஒரு முறையே இலாபம் கிடைக்கும்.
- வட்டியை அல்லாஹ் அழிப்பான், வியாபாரத்தை வளர்ப்பான்.
- வட்டியில் அழிவும் நாசமும் ஏற்படும், வியாபாரத்தில் அபிவிருத்தியும் செழிப்பும் ஏற்படும்.
- வட்டியுடன் தொடர்பானவர்களை மனிதர்கள் வெறுப்பர், வியாபாரிகளை விரும்புவர்.

(1 x 3 = 3 புள்ளிகள்)

(iii)
- பொய்ச் சத்தியம் செய்தல்.
- அளவை நிறுவையில் மோசடி
- பதுக்கல்
- விலை அதிகரிப்பு
- கலப்படம் செய்தல்
- பொய் பேசுதல்
- திருட்டுப் பொருட்கள்
- அபகரிக்கப்பட்ட பொருட்கள்
- நஜீஸானவை

(1 x 5 = 5 புள்ளிகள்)

மொத்தம் 2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்**

இவ்வினா வியாபாரக் கொடுக்கல் வாங்கல், உழைத்து வாழ்தல் தொடர்பான விடயங்களில் ஹலால் ஹராம் அடிப்படையில் தொகுக்கப்பட்டதாகும்.
இதன்படி,
I. இஸ்லாம் உழைப்புக்கு வழங்கியுள்ள முக்கியத்துவம் இரண்டு
II. வட்டிக்கும் வியாபாரத்துக்குமிடையிலான வேறுபாடுகள்
III. வியாபார நடவடிக்கையின் போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் எவை

ஆகியன பரீட்சார்த்திகளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டன.
விடையளித்தோர்களில் 55% த்தினர் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளார். (வரைபு 2)
இவ்வினாவுக்கான மொத்தப் பத்துப் புள்ளிகளில் 40% த்தினர் 8-10 வரையிலான புள்ளிகளையும் 20% த்தினர் 6-7 வரையிலான புள்ளிகளையும் 29% மானோர் 3-5 புள்ளிகளையும் 12% த்தினர் 0-2 வரையிலான புள்ளிகளையும் பெற்றனர். (வரைபு 3)
இவ்வினாவின் 3 பிரிவுகளுக்கும் சரியான விடையளித்துள்ளவர் வீதம்

பிரிவு I 63%
பிரிவு II 70%
பிரிவு III 69%

வியாபாரக் கொடுக்கல் வாங்கல், உழைத்து வாழ்தல் தொடர்பான அறிவு மாணவர்களிடம் காணப்படுகின்றமை தெளிவாகின்றது.

**வினா 07**

**7.** (i) *முஸ்லிமான ஓர் ஆணின் ஆடை தொடர்பாக கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள் யாவை ?*
(ii) *ஏன் ஒரு முஸ்லிம் ஹலாலானவற்றை மாத்திரமே உண்ண வேண்டும் என்று விளக்குக.*
(iii) *முஸ்லிமான ஒருவர் மணம் முடிப்பதற்குத் தடுக்கப்பட்ட மஹ்ரமிகளை அட்டவணைப்படுத்துக.*

(i)
- ஆணின் அவ்ரத்தான தொப்புளுக்கும் முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதியை மறைக்கக் கூடியதாக இருத்தல்.
- பட்டாடையாக இல்லாதிருத்தல்
- ஆடைகளை கணுக்காலுக்குக் கீழ் தொங்க விடாது அணிதல்
- பெண்களுடைய ஆடையாக இல்லாதிருத்தல்
- சுத்தமான மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- ஆடம்பரமற்ற எளிமையான ஆடையாக அமைதல் வேண்டும்.
- உடலின் உட்பகுதியை வெளியே எடுத்துக் காட்டாததாக அமைதல் வேண்டும்.
- குங்கும நிற ஆடையாக இல்லாதிருத்தல்.

(1/2 x 4 = 2 புள்ளிகள்)

(ii)
- அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் கட்டளைக்கு அடிபணிதல்
- ஹலாலான உணவை உட்கொண்டால் மாத்திரமே எமது பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
- ஹலாலான உணவை உட்கொண்டவர்கள் மாத்திரமே சுவனம் நுழைவர்
- ஹலாலான உணவை உட்கொண்டவர்களின் அமல் ஏற்றுக்கொள்ளப்படும்
- ஹறாமான உணவை உட்கொள்பவர்களின் உடல் நரகத்திற்குத் தகுதியாகும்.

(1 x 3 = 3 புள்ளிகள்)

(iii) • மஹ்ரமிகளில் நிரந்தர மஹ்ரமிகள் தற்காலிக மஹ்ரமிகள் என இரண்டு வகைப்படும்.

• நிரந்தர மஹ்ரமிகள்

  - இரத்த உறவு
    உ-ம்: தாய், சகோதரி

  - திருமண உறவு
    உ-ம்: மனைவியின் தாய், மனைவியின் முன்னைய கணவனின் மகள்

  - பால் குடி உறவு
    உ-ம்: பால்குடி சகோதரி

• தற்காலிக மஹ்ரம்
  - உ-ம்: மனைவியின் சகோதரி
    திருமண பந்தத்தில் உள்ள பெண்

மஹ்ரமிகளின் 2 வகைகளும் எழுதியிருப்பின் 2 புள்ளிகளும்
அவைகளுக்கு (உ-ம்) எழுதியிருப்பின் 3 புள்ளிகளும் (2 + 3 = 5 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்**

இவ்வினா ஹலாலான உணவு, உடை, திருமணம் செய்ய ஹராமானோர் தொடர்பான சட்டவிதி தொடர்பானதாகும்.

• முஸ்லிம் ஆணொருவருடைய உடை தொடர்பாக கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள்
• முஸ்லிம் ஒருவர் ஹலால் உணவை மாத்திரமே உண்ணுதல்
• முஸ்லிம் ஒருவர் மணமுடிப்பதற்கு தடுக்கப்பட்ட மஹ்ரமிகளை அட்டவணைப்படுத்தல்

போன்ற பகுதிக்கு விடையளிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இவ்வினாவை 70 % த்தினர் தெரிவு செய்துள்ளனர். வினாவை அதிகமானோர் தெரிவு செய்தாலும் புள்ளிகள் பெற்ற விதம் சிறப்பாக அமையவில்லை. இவ்வினாவுக்குரிய 10 புள்ளிகளில் 08 -10 புள்ளிகளை 33% த்தினரும் 6-7 புள்ளிகளை 22% த்தினரும் 3-5 வரையிலான புள்ளிகளை 32% னரும் 0-2 வரையிலான புள்ளிகளை 14% த்தினரும் பெற்றுள்ளனர்.(வரைபு 3)

இவ்வினாவுக்கு விடையளித்த பரீட்சார்த்திகளின் ஒவ்வொரு பகுதிக்கும் விடையளித்தோர் விவரம் கீழ்வருமாறு

| | | |
|---|---|---|
| பகுதி | I | 86% |
| பகுதி | II | 62% |
| பகுதி | III | 54% |

(வரைபு 4)

முஸ்லிம் ஆணொருவருடைய உடைதொடர்பாக மாணவர்களிடம் பரந்த அறிவு காணப்படுகின்ற முதலாவது பிரிவுக்கு விடையளித்ததிலிருந்து தெளிவாகின்றது. பிரிவு ஐஐ இலிருந்து முஸ்லிம் ஒருவர் ஹலால் உணவை மாத்திரம் உண்ணுவது தொடர்பாக சிறப்பாக விடையளித்துள்ளதோடு அதற்கு 38 த்தினர் சரியாக விடையளிக்கவில்லை. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிதல், ஹலால் உணவை உண்டால் மாத்திரமே பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுதல், அவர்கள் சுவர்க்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படல், அமல் ஏற்றுக் கொள்ளப்படுதல், உடலும் உள்ளமும் ஒளி பெறுதல் போன்றவை எதிர்பார்க்கப்பட்ட விடைகளாகும்.

எனினும் புள்ளிகளை இழந்தவர்கள் ஹலால், ஹராம் உணவுகளின் பெயர்களை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர்.

இங்கு மணம் முடிப்பதற்கு தடைசெய்யப்பட்ட மஹ்ரமிகளை அட்டவணைப்படுத்தாது எழுதியிருந்தனர். நிரந்தர மஹ்ரமிகள், தற்கால மஹ்ரமிகளை இரண்டாகப் பட்டியற்படுத்தல் எதிர்பார்க்கப்பட்டது. இவ்வாறு பட்டியற் படுத்தாமையே புள்ளிகளை இழந்தமைக்கான காரணமாகும்

# பகுதி III

## 3.0 விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1 விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்

**பொதுவானவை**

- ✶ மாணவர்கள் வினாப்பத்திரங்களிலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்?, கட்டாய வினாக்கள் எவை?, நேர ஒதுக்கீடு எவ்வளவு?, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக் கொண்டு, பின்னர் வினாக்களை சரியாக வாசித்து விளங்கி விடையளித்தல் வேண்டும்.

- ✶ முதலாம் பகுதிக்கு விடையளிக்கும்போது மிகச் சரியான ஒரு விடையைத் தெரிவுசெய்து எதிரேயுள்ள கூட்டுக்குள் தெளிவாக புள்ளடியிடல் வேண்டும்.

- ✶ இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.

- ✶ எழுத்துக்களைப் பிழையின்றி தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.

- ✶ ஒவ்வொரு விடைத்தாள்களின் இரு பக்கத்திலும் சுட்டெண்களைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.

- ✶ வினா இலக்கத்தையும் பிரிவு வினாக்களின் இலக்கங்களையும் விடை எழுத ஆரம்பிக்குமுன் தெளிவாக சரியாக குறிப்பிட வேண்டும்.

- ✶ வினாக்கள் கேட்கப்பட்டிருப்பதற்கேற்ப சுருக்கமாயும், விளக்கமாயும் விடையளித்தல் நன்று.

- ✶ வினாக்களுக்கேற்ப விடையளிக்கும்போது, தர்க்கரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் விடையளித்தல் வேண்டும்.

**பாடரீதியானவை**

- ✶ வினாக்களுக்கு விடை எழுதும்போது இஸ்லாமிய வாழ்க்கை நடைமுறைகளுடன் தொடர்புபடுத்தி விடை எழுதுதல் நன்று.

- ✶ இஸ்லாம் பாடத்துடன் தொடர்பான அரபுச் சொற்களுடைய வினாக்களை முறையாக இனங்கண்ட பின்பே விடை எழுத ஆரம்பிக்க வேண்டும்.

## 3..2 கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்

- ✶ தரம் 10.11களுக்கு கடந்தகால பாடம் தொடர்பான வினாப்பத்திரங்களையும் புள்ளி வழங்குந் திட்டங்களையும் உள்வாங்கி புள்ளிபெறும் முறைகள் மாணவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும்.

- ✶ இஸ்லாமிய வழக்கிலுள்ள சொற்களையும் அரபுச் சொற்றொடர்களையும் சரியாக இனங்காணும்படி கற்பித்தல் இடம் பெற வேண்டும்.

- ✶ இஸ்லாம், பாடத்துடன் மட்டுமன்றி வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதனால் அதில் மாணவர்கள் ஆர்வம் கொள்ளும் வகையிலும் செயற்பாடு ரீதியாக முன் வைக்கப்படுவது அவர்களைக் கவரச் செய்யும்.